# 67/2025-T

| Question Booklet Alpha Code | A | Question Booklet Serial Number |
|---|---|---|

**Total Number of Questions : 100** **Time : 1 Hour 30 Minutes**

**Maximum Marks : 100**

A

## INSTRUCTIONS TO CANDIDATES

1. The question paper will be given in the form of a Question Booklet. There will be four versions of question booklets with question booklet Alpha Code viz. A, B, C & D.
2. The Question Booklet Alpha Code will be printed on the top left margin of the facing sheet of the question booklet.
3. The Question Booklet Alpha Code allotted to you will be noted in your seating position in the Examination Hall.
4. If you get a question booklet where the Alpha Code does not match to the allotted Alpha Code in the seating position, please draw the attention of the Invigilator IMMEDIATELY.
5. The Question Booklet Serial Number is printed on the top right margin of the facing sheet. If your question booklet is unnumbered, please get it replaced by new question booklet with same Alpha Code.
6. The question booklet will be sealed at the middle of the right margin. Candidate should not open the question booklet until the indication is given to start answering.
7. Immediately after the commencement of the examination, the candidate should check that the question booklet supplied to him/her contains all the 100 questions in serial order. The question booklet does not have unprinted or torn or missing pages and if so, he/she should bring it to the notice of the Invigilator and get it replaced by a complete booklet with same Alpha Code. This is most important.
8. A blank sheet of paper is attached to the question booklet. This may be used for rough work.
9. **Please read carefully all the instructions on the reverse of the Answer Sheet before marking your answers.**
10. Each question is provided with four choices (A), (B), (C) and (D) having one correct answer. Choose the correct answer and darken the bubble corresponding to the question number using Blue or Black Ball Point Pen in the OMR Answer Sheet.
11. **Each correct answer carries 1 mark and for each wrong answer 1/3$^{rd}$ mark will be deducted. No negative mark for unattended questions.**
12. No candidate will be allowed to leave the examination hall till the end of the session and without handing over his/her Answer Sheet to the Invigilator. Candidates should ensure that the Invigilator has verified all the entries in the Register Number Coding Sheet and that the Invigilator has affixed his/her signature in the space provided.
13. Strict compliance of instructions is essential. Any malpractice or attempt to commit any kind of malpractice in the Examination will result in the disqualification of the candidate.

DO NOT WRITE HERE

1. கல்வி மீது தாக்கம் ஏற்படுத்தும் சமூக காரணி எது?
(A) சக குழுவினர்
(B) வாடிக்கையான பழக்கவழக்கங்கள்
(C) தொழில்நுட்பம்
(D) சமூகக் கட்டுப்பாடு

2. கீழ்க்கண்டவற்றுள் முறை சார்ந்த கல்வியின் பண்பியல்பு அல்லாதது எது?
(A) திட்டமிடப்பட்ட கற்றல் முறை
(B) உறுதியான / கண்டிப்பான விதிகள் இல்லை
(C) நிலையான மதிப்பீடு
(D) முன்னரே தீர்மானிக்கப்பட்ட பாடத் திட்டம்

3. சிக்கல் அடிப்படையிலான கல்வியில் சேர்க்கப்படாதது எது?
(A) படைப்பாற்றல் மிக்க பங்கேற்புடன் கூடிய ஒரு உணர்வுள்ள தனிநபர்
(B) விமர்சன சிந்தனையாளர்களாகக் மாணவர்கள் காணப்படுகின்றனர்.
(C) உலகின் ஒரு பார்வையாளராக கற்பவர் இருக்கிறார்.
(D) விவாதத்தை ஏற்றுக்கொள்கிறார்

4. தனிநபரின் உடல், மன மற்றும் ஒழுக்க வளர்ச்சியை அடைவதே கல்வியின் குறிக்கோள் என்று குறிப்பிட்ட நபர் யார்?
(A) ஃப்ரோபெல்
(B) பெஸ்டலோசி
(C) ஜான் ட்யூவி
(D) ரூசோ

5. பாலர் பள்ளியில் கட்டுமான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதன் நோக்கம் என்ன?
(A) கலை ரசனையை உருவாக்கல்
(B) தற்சார்பை உருவாக்கல்
(C) கைகள் மற்றும் விரல்களில் தசை வளர்ச்சி
(D) இவற்றில் எதுவுமில்லை

6. "மனிதன் இதுவரை எதிர்கொண்ட மிகக் கடினமான பிரச்சனைகளின் முறையான மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட பகுப்பாய்வே தத்துவம்" என்று யார் பரிந்துரைத்தார்?
(A) சாக்ரடீஸ்
(B) ஹேன்டர்சன்
(C) ஜான் அமுஸ் கொமினியஸ்
(D) பேராசிரியர் லாரி

7. "கல்வியின் குறிக்கோள் சமூகத்திற்கும் தனிநபருக்கும் பயனுள்ள வாழ்க்கையை நடத்துவதற்கான திறன்களைப் பெறுவதாகும். ஆகையால், குறிப்பிட்ட இலக்குகளை முன்கூட்டியே தீர்மானிப்பது அறிவியல்பூர்வமானதல்ல" என்ற கருத்து எந்த தத்துவக் கொள்கையுடன் தொடர்புடையது?

(A) இலட்சியவாதம்

(B) இயற்கைவாதம்

(C) நடைமுறைவாதம்

(D) மனவாதம்

8. கேரளாவில் நவீன நர்சரி பள்ளிகளின் ஆரம்ப வடிவங்கள் யாவை?

(A) குழந்தை வகுப்புகள்

(B) முதன்மை-அடிப்படை பள்ளி

(C) குழந்தைகளுக்கான பகல்நேர பராமரிப்பு மையங்கள்

(D) ஆஷான் பாடசாலா

9. உலக சுகாதார நிறுவனம் எப்போது உருவானது?

(A) ஏப்ரல் 7, 1948

(B) செப்டம்பர் 12, 1947

(C) டிசம்பர் 11, 1946

(D) இவற்றில் எதுவுமில்லை

10. "ஆசிரியரின் பங்கு என்பது, சாதாரண நபர்களையும் ஈர்க்கும் திறன் கொண்ட ஒரு குழுத் தலைவரின் பங்காகும்" கல்வி குறித்த இக்கருத்தாக்கம் எந்த தத்துவத்துடன் தொடர்புடையது?

(A) இலட்சியவாதம்

(B) மனிதநேயம்

(C) நடைமுறைவாதம்

(D) இயற்கைவாதம்

11. குழந்தைகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை இலக்காக கொண்டிருக்கும் மத்திய அரசின் ஆதரவு பெற்ற ஒரு திட்டம்

(A) செஞ்சிலுவைச் சங்கம்

(B) ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்

(C) ஆசிரியர் கல்விக்கான தேசிய கவுன்சில்

(D) இவற்றில் எதுவுமில்லை

12. பின்வருவனவற்றில் குழந்தைகளது கல்விக்கான முகமை எது?
(A) பாலவாடிகள்
(B) மழலையர் பள்ளி
(C) கல்வித் துறை
(D) இவற்றில் எதுவுமில்லை

13. குழந்தைகளின் நலவாழ்வு மற்றும் குழந்தைகள் கல்விக்கு முன்னுரிமை அளிக்கவும், தன்னார்வ நிறுவனங்களை கண்காணிக்கவும் மற்றும் அவைகளுக்கு நிதியுதவி வழங்கவும் 1953 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட அமைப்பு எது?
(A) குழந்தைகள் நலவாழ்விற்கான இந்திய கவுன்சில்
(B) கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான தேசிய கவுன்சில்
(C) பாரத் சேவக் சமாஜ்
(D) மத்திய சமூக நல வாரியம்

14. மக்களின் உழைப்புத் திறனை நாட்டின் மறுசீரமைப்புக்காகப் பயன்படுத்தும் நோக்கத்துடன் 1952 இல் நிறுவப்பட்ட சமூக அமைப்பு எது?
(A) குழந்தைகள் நலவாழ்விற்கான இந்திய கவுன்சில்
(B) மத்திய சமூக நல வாரியம்
(C) பாரத் சேவக் சமாஜ்
(D) அங்கன்வாடிகள்

15. இயற்கைவாதத்துடன் தொடர்புடையது எது?
(A) விசாரணையே அறிவின் மூலாதாரமாகும்.
(B) அனைத்திற்கும் மனிதனே மையமாக இருக்கிறான்
(C) ஐந்து புலன்களும் அறிவைப் பெறுவதற்கான வாயில்கள்
(D) மாற்றம் என்பது நிலையான உண்மை; மதிப்புகளும் மாற்றத்திற்கு உட்பட்டவையே

16. எந்த கல்வி அமைப்பு சதுர்வர்ண முறையுடன் தொடர்புடையது?
(A) வேதக் கல்வி
(B) பிராமணீயக் கல்வி
(C) புத்த சமயக் கல்வி
(D) இடைக்காலக் கல்வி

17. பின்வருவனவற்றில் எது சர்வதேச கல்வி முகமையல்ல?
(A) CBSE
(B) CARE
(C) UNICEF
(D) UNESCO

18. சமூக சுகாதாரத்தின் அடிப்படையில் பின்தங்கிய நிலையைக் காட்டுவது எது?

(A) துகள் போன்ற குப்பைகளை கொட்டுதல்

(B) அழுக்குப் படிந்த சாலைகள்

(C) துர்நாற்றம் வீசும் வடிகால்கள்

(D) மேற்கூறிய அனைத்தும்

19. மக்கள் தொகை மற்றும் சுகாதாரம் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது தவறானது?

(A) அதிக பிரசவங்கள் தாய் மற்றும் குழந்தையின் ஆரோக்கியத்தைப் பாதிக்கின்றன

(B) அதிக நபர்கள் உள்ள ஒரு பெரிய குடும்பம் போதுமான கவனம் மற்றும் பராமரிப்பை பெறுகிறது

(C) மக்கள்தொகை வளர்ச்சி, சமூக சுகாதாரம் மற்றும் சுகாதாரப் பராமரிப்பைப் பாதிக்கிறது

(D) மேற்கூறிய அனைத்தும்

20. அங்கன்வாடி எந்த கல்வி முகமையின் ஒரு பகுதியாக செயல்படுகிறது?

(A) கல்வித் துறை

(B) சமூக நலத் துறை

(C) பட்டியல் சாதியினர் நலத் துறை

(D) ஊரக வளர்ச்சித் துறை

21. உடல் ஆரோக்கியத்தை எதிர்மறையாக எது பாதிப்பதில்லை?

(A) சுகாதாரமின்மை

(B) காற்று மாசுபாடு

(C) ஆரோக்கியமற்ற பழக்கவழக்கங்கள்

(D) கிருமிகளை எதிர்க்கும் உடலின் திறன்

22. தேசிய ஆசிரியர் கல்வி கவுன்சில் (NCTE) எப்போது ஒரு சட்டப்பூர்வ அமைப்பாக நடைமுறைக்கு வந்தது?

(A) 1973

(B) 1993

(C) 1995

(D) இவற்றில் எதுவுமில்லை

23. ஒரு முழு ஆரோக்கியமான குழந்தை தொடர்பான கூற்றுகள்

i. உடல் நலக்குறைவுடன் (உடல் நோயுடன்) மன வளர்ச்சியும் மற்றும் மன ஆரோக்கியமும் கூட ஒன்றோடொன்று இணைந்து செல்கின்றன.

ii. குழந்தைகள் ஆரோக்கியமாக இருக்க தாயின் ஆரோக்கியத்தைப் பேணுவது அத்தியாவசியம்.

(A) (i) மட்டும்

(B) (ii) மட்டும்

(C) (i) மற்றும் (ii) சரியானவை

(D) இவற்றில் எதுவுமில்லை

24. ஒரு நான்கு வயது பெண் குழந்தையின் சராசரி எடை மற்றும் உயரம் கீழ்க்கண்டவற்றுள் எது?

(A) 16.12 கிலோ கிராம், 104.70 செ.மீ

(B) 15.85 கிலோ கிராம், 104.19 செ.மீ

(C) 15.85 கிலோ கிராம், 104.70 செ.மீ

(D) 16.12 கிலோ கிராம், 104.19 செ.மீ

25. தனிநபர் தூய்மையில் இடம்பெறாதது எது?

(A) சுத்தமான ஆடைகள்

(B) பிளாஸ்டிக் மாசுபாடு

(C) சுத்தமான கழிப்பறைகளைப் பயன்படுத்துதல்

(D) சரியான நேரத்தில் குளித்தல்

26. எந்த நோய் காற்றின் வழியாகப் பரவுகிறது?

(A) போலியோ

(B) மஞ்சள் காமாலை

(C) தாளம்மை (கூவைக்கட்டு)

(D) காய்ச்சல்

27. உறைந்த இரத்தத்தில் உள்ள புரதம் எது?

(A) ஃபைப்ரின்

(B) மையோசின்

(C) சீரம் அல்புமின்

(D) ஜெலட்டின்

28. கீழ்வரும் கூற்றுகளை கவனமாக வாசிக்கவும்:

(i) ஒரு நோயிலிருந்து மீண்டு குணமடைந்த பிறகு அந்த நோய்க்கான நோய் எதிர்ப்பு சக்தி ஏற்படுகிறது.

(ii) நோய்த்தடுப்பு திறனூட்டல் என்பது, செயற்கையான அந்த நோய்க்கான எதிர்ப்பு சக்தியை உருவாக்கும் செயல்முறையாகும்.

(iii) ஒரு தடுப்பூசி (வேக்சின்) என்பது பலவீனப்படுத்தப்பட்ட வடிவங்களில் உள்ள நோய்க்கிருமிகளைக் கொண்ட திரவமாகும்.

(A) (i) & (ii) சரியானவை

(B) (i), (ii) & (iii) சரியானவை

(C) (iii) மட்டும் சரியானது

(D) இவற்றில் எதுவுமில்லை

29. "பாலர் பள்ளியில் கற்பித்தல் முறைகள்" (Pedagogics of Kindergarten) என்ற நூலை எழுதியவர் யார்?

(A) ஹென்ரிச் பெஸ்டலோசி

(B) ஃபெடரிக் ஃப்ரோபெல்

(C) மரியா மாண்டிசோரி

(D) மேக்மில்லன் சகோதரிகள்

30. உலக சுகாதார நிறுவனத்தின் செயல்பாடுகளில் இடம்பெறாதது எது?

(A) குழந்தைகளின் ஆரோக்கியம் மற்றும் மன வளர்ச்சிக்காக பணியாற்றுவது

(B) ஆசிரியர் பயிற்சித் திட்டங்களை உருவாக்குவது

(C) சுகாதாரத் துறையில் ஆராய்ச்சியை நடத்துவது

(D) குழந்தைகளின் ஆரோக்கியத்தைப் பராமரிக்க ஊட்டச்சத்தை வழங்குவது

31. சிறு குழந்தைகள் வண்ணக் க்ரேயான்கள் மற்றும் பென்சில்களைக் கொண்டு கோடுகளையும் வட்டங்களையும் வரைவது எந்த வளர்ச்சியைக் குறிக்கிறது?

(A) மொத்த தசை வளர்ச்சி

(B) கைகள் மற்றும் விரல்களில் சிறு தசை வளர்ச்சி

(C) மொழி வளர்ச்சி

(D) சமூக வளர்ச்சி

32. மூன்று வயது குழந்தை தனது விரல்களை துல்லியம், நுட்பம் மற்றும் வேகத்துடன் அசைக்கும் திறன் எந்த வளர்ச்சியைக் குறிக்கிறது?

(A) வரையும் திறன்

(B) இசைக்கருவிகளைப் பயன்படுத்தும் திறன்

(C) வளர்ச்சி

(D) மேம்பாடு

33. குழந்தை வளர்ச்சி தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது உண்மை இல்லை?

(A) வளர்ச்சி என்பது இயற்கையில் ஒட்டுமொத்தமானது.

(B) வளர்ச்சி கணிக்க முடியாதது.

(C) வளர்ச்சி என்பது தகவமைப்பு மற்றும் கற்றலை சார்ந்தது.

(D) வளர்ச்சி என்பது ஒன்றோடொன்று தொடர்புடையது.

34. பியாஜெட் - ன் கோட்பாட்டின்படி, அறிவாற்றல் கட்டமைப்பில் புதியதை ஒழுங்குபடுத்தி கட்டமைப்பதன் (Schemas) மூலம் அல்லது ஏற்கனவே உள்ள கட்டமைப்புகளை மாற்றுவதன் மூலம் சிக்கல்களைத் தீர்ப்பது என்னவென்று அழைக்கப்படுகிறது?

(A) நிறுவுதல்

(B) ஏற்று தகவமைத்தல்

(C) ஏற்கனவே உள்ள அறிவுடன் புதிய தகவலை இணைத்தல்

(D) ஒருங்கமைவு

35. அறிவாற்றல் வளர்ச்சியின் எந்தக் கட்டத்தில் ஒரு குழந்தை கோட்பாடு சார்ந்த சிக்கல்களைத் தர்க்கரீதியாக தீர்க்கிறது?

(A) முறையான அறிவாற்றல் மற்றும் இயக்க செயல்முறை (சைக்கோமோட்டார்) நிலை

(B) உறுதியான இயக்க செயல்முறை நிலை

(C) பிராக் இயக்க செயல்முறை நிலை

(D) புலன் / உணர்திறன் இயக்க நிலை

36. "ஆளுமை என்பது மரபுரிமையாகப் பெறப்பட்ட மற்றும் சமூக-கலாச்சார சூழ்நிலைகளுக்கு ஏற்ப உருவாகும் அல்லது சிதைவடையும் பண்புகளின் கலவையாகும்" என்று யார் குறிப்பிட்டார்?

(A) கார்ல் ரோஜர்ஸ்

(B) ஆபிரகாம் மாஸ் லா

(C) ஆல்போர்ட்

(D) சிக்மண்ட் பிராய்ட்

37. எந்த உளவியல் கோட்பாட்டின் அடிப்படையில், தொடக்க வகுப்புகளில் கருப்பொருள் அடிப்படையிலான கற்றல் முறை தேர்ந்தெடுக்கப்பட்டது?

(A) சமூக கற்றல் கோட்பாடு

(B) மனோ பகுப்பாய்வு கோட்பாடு

(C) நாடகக் கோட்பாடு

(D) கெஸ்டால்ட் உளவியல்

38. பல பொருள்களின் படங்களுக்கு மத்தியில் ஒரு வீட்டின் படத்தை சரியாகச் சுட்டிக்காட்டுமானால், அந்தக் குழந்தையின் அறிவாற்றல் வளர்ச்சி எந்தக் கட்டத்தில் உள்ளது?

(A) குறியீட்டு நிலை

(B) செயல் நடவடிக்கை நிலை

(C) தோற்றப்பட நிலை

(D) இவற்றில் எதுவுமில்லை

39. பின்வரும் கற்றல் முறைகளில் எது தொடர்புபடுத்தலின் சாத்தியத்தைப் பயன்படுத்துகிறது?

(A) விளையாட்டு முறை

(B) படம்-வார்த்தை அட்டை ஒருங்கிணைக்கும் முறை

(C) தொகுத்தாக்க முறை

(D) கண்டுபிடிப்பு கற்றல் முறை

40. தொடர்புகளைக் கண்டறிதல், சிக்கல்களைத் தீர்த்தல் மற்றும் அறிவைச் சுயமாக சரிபார்த்தல் போன்றவற்றில் அதிக திறன்களைக் கொண்ட ஒரு குழந்தையின் பன்முக நுண்ணறிவின் எந்த "கூறு" மிகவும் முக்கியமானது?

(A) தன்னைப் பற்றிய சுய நுண்ணறிவு

(B) மொழியியல் நுண்ணறிவு

(C) ஒருவர் மற்றவருக்கு இடையிலான நுண்ணறிவு

(D) பகுத்தறிவு மற்றும் கணித நுண்ணறிவு

41. குழந்தைகள், பல நடத்தை முறைகள் மற்றும் பழக்கவழக்கங்களை உற்றுநோக்குதல் மற்றும் பாவனையாகப் பின்பற்றுதல் மூலம் கற்றுக்கொள்கின்றன.

இந்தக் கூற்றுடன் எந்தக் கற்றல் கோட்பாடு ஒத்துப்போகிறது?

(A) உள்ளுணர்வு கற்றல் கோட்பாடு

(B) சமூக கற்றல் கோட்பாடு

(C) துணை கற்றல் கோட்பாடு

(D) கலாச்சார கற்றல் கோட்பாடு

42. வகுப்பறையில் எதிர்கொள்ளப்படும் பல்வேறு கற்றல் சிக்கல்களை அறிவியல் பூர்வமாக பகுப்பாய்வு செய்து தீர்க்கும் செயல்பாட்டின் பெயர் என்ன?

(A) சோதனை முறை

(B) ஆராய்ச்சி முறை

(C) செயல் ஆராய்ச்சி

(D) வழக்கு ஆய்வு

43. பின்வருவனவற்றில் நிபுன் (NIPUN) பாரத் திட்டத்தின் முக்கிய நோக்கம் எது?

(A) வயதுக்கு உரிய கற்றல் விளைவுகளை அடைவது

(B) அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவை அடைவது

(C) மன மற்றும் உடல் ஆரோக்கியத்தை உறுதி செய்வது

(D) அனைத்து குழந்தைகளுக்கும் தடுப்பூசி போடப்படுவதை உறுதி செய்வது

44. பின்வருவனவற்றில் கேரள பாலர் பள்ளிக் கல்வி பாடத்திட்டத்தின் அம்சமாக இல்லாதது எது?

(A) பாலர் பள்ளி என்பது குடும்ப அமைப்பின் நீட்டிப்பாக இருக்க வேண்டும்

(B) கற்றல் முறை விளையாட்டு சார்ந்ததாக இருக்க வேண்டும்

(C) முறையான தேர்வு முறைகள் இருக்க வேண்டும்

(D) மூன்று முதல் ஆறு வயது வரையிலான வயது வரம்பு, பாலர் பள்ளி வயதாகக் கருதப்படுகிறது.

45. பாலர் பள்ளிக் கல்வியின் முக்கிய நோக்கம் என்ன?

(A) உடல் சார்ந்த, அறிவுசார்ந்த மற்றும் மன வளர்ச்சிக்கு அடித்தளம் அமைப்பது.

(B) முறையான கல்விக்குத் தயார் செய்வது

(C) பணியாற்றும் பெற்றோரின் குழந்தைகளுக்குப் பாதுகாப்பான இடத்தை வழங்குவது.

(D) இவற்றில் எதுவுமில்லை.

46. பாலர் பள்ளி குழந்தைகளை மதிப்பிடுவதற்கு மிகவும் பொருத்தமான முறை எது?

(A) எழுத்துத் தேர்வு

(B) நேர்காணல்

(C) கண்காணிப்பு

(D) சரிபார்ப்புப் பட்டியல்

47. குழந்தைகளை 1 ஆம் வகுப்புக்குத் தயார்படுத்துவதற்காக NCERT ஆல் தயாரிக்கப்பட்ட கல்விக்கான உள்ளடக்கப் பொருட்கள் யாவை?

(A) ஞானபிரவேஷ்

(B) வித்யா பிரவேஷ்

(C) தீக்ஷா

(D) பிரவேஷிகா

48. மத்திய அரசின் நிதியுதவி திட்டமான 'NISHTHA' (நிஷ்தா)- ன் முக்கிய நோக்கம் என்ன?

(A) ஆசிரியர்களுக்கு திறனதிகாரம் அளித்தல்

(B) கற்றல் ஆதாரவளங்களை உருவாக்குதல்

(C) உடல் நிலைமைகளின் மேம்பாடு

(D) தொடர்ச்சியான மதிப்பாய்வு

49. 2017 ஆம் ஆண்டில் கேரளாவின் SCERT ஆல் பாலர் பள்ளி ஆசிரியர்களுக்காக தயாரிக்கப்பட்ட ஆசிரியர் கையேடு / துணைக்கருவி எது?

(A) கலிதோனி

(B) கலிப்பெட்டி

(C) மழவில்லு

(D) கலிப்பாட்டம்

50. "பிரசிக்ஷா 2020" -ன் முக்கிய நோக்கம் என்னவாக இருந்தது?

(A) பாலர் பள்ளி கற்றல் ஆதார வளங்களை உருவாக்குதல்

(B) பாலர் பள்ளி பாடத்திட்டத்தை உருவாக்குதல்

(C) பாலர் பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி

(D) பாலர் பள்ளியின் சூழ்நிலை ஆய்வு

51. பின்வருவனவற்றில் ஒரு மூன்று வயது குழந்தையின் ஆரம்பகால கணிதத் திறனை எது சுட்டிக்காட்டுகிறது?

(A) எண்களை எழுதுதல்

(B) எண்களை வாசித்தல்

(C) கணிதப் பாடல்களைப் பாடுதல்

(D) பெரியவை மற்றும் சிறியவை என்னவென்று அடையாளம் காணுதல்

52. ஆரம்ப குழந்தைப் பருவ பராமரிப்பு மற்றும் மேம்பாட்டிற்கான மத்திய பாடத்திட்டக் கட்டமைப்பு எது?

(A) 2020 ஆம் ஆண்டுக்கான அடிப்படை நிலைக்கான NEP (புதிய கல்விக் கொள்கை)

(B) 2022 ஆம் ஆண்டுக்கான அடிப்படை நிலைக்கான NCF

(C) 2021 ஆம் ஆண்டுக்கான பாலர்பள்ளி நிலைக்கான NCF

(D) இவற்றில் எதுவுமில்லை

53. "விளையாட்டு என்பது குழந்தை பருவத்தில் மனித வளர்ச்சியின் மிக உயர்ந்த வடிவம். ஏனெனில் விளையாட்டு மட்டுமே குழந்தை தனது ஆன்மாவில் உள்ளதை சுதந்திரமாக வெளிப்படுத்தும் ஒரே வழியாகும்." - இக்கூற்று யாருடையது?

(A) மகாத்மா காந்தி

(B) மரியா மாண்டிசோரி

(C) பிரட்ரிக் ஃபால்க்னர்

(D) ரூசோ

54. பின்வருவனவற்றில் எது சரியான வரிசையில் உள்ளது?

(A) கல்வி நோக்கங்கள் —> பாடத்திட்ட நோக்கங்கள் —> திறன்கள் —> கற்றல் நோக்கங்கள்.

(B) கல்வி நோக்கங்கள் —> கற்றல் நோக்கங்கள் —> பாடத்திட்ட நோக்கங்கள் —> திறன்கள்

(C) கற்றல் நோக்கங்கள் —> திறன்கள் —> கல்வி நோக்கங்கள் —> பாடத்திட்ட நோக்கங்கள்.

(D) பாடத்திட்ட நோக்கங்கள் —> கல்வி நோக்கங்கள் —> கற்றல் நோக்கங்கள் —> திறன்கள்.

55. பின்வருவனவற்றில் பெற்றோருக்கான குழந்தை வளர்ப்பின் வரம்பில் சேர்க்கப்பட்டுள்ளது எது?

(A) தந்தை

(B) உறவினர்கள்

(C) சுற்றுப்புறத்தினர்

(D) இவை அனைத்தும்

56. குழந்தைகளின் திறன்கள் மற்றும் திறமைகளை ஆழமாக அளவிடக்கூடிய மதிப்பாய்வு முறை எது?

(A) அளவு ரீதியான மதிப்பாய்வு

(B) வெளிப்புற மதிப்பாய்வு

(C) கால வரையறை மதிப்பாய்வு

(D) தர ரீதியிலான மதிப்பாய்வு

57. "வானவில்லுடன் உயரும் குழந்தை மனம், உண்மையான கவிதையின் அனைத்து உணர்ச்சிகளையும் பகிர்ந்து கொள்ளும். உணர்ச்சியால் மிகவும் எளிதாக ஈர்க்கப்படும் வாசகர்கள் இவர்கள்." - இக்கூற்று யாருடையது?

(A) சுகதகுமாரி

(B) D. சுஜாதாதேவி

(C) ராஜலட்சுமி முரளீதரன்

(D) சுமங்களா

58. ஒரு பாலர் பள்ளி அங்கீகாரம் பெற நிர்ணயிக்கப்பட வேண்டிய ஆசிரியர்-மாணவர் விகிதம் என்ன?

(A) 1:15 (B) 1:25

(C) 1:35 (D) 1:40

59. பாலர் பள்ளி பாடத்திட்டத்தை உருவாக்குவதற்கும், பயிற்சி உபகரணங்களைப் தீர்மானிப்பதற்கும் எந்த முகமைக்கு கல்விசார் கட்டமைப்பை தரப்பட்டுள்ளது?

(A) சமக்ர சிக்ஷா கேரளா (SSK)

(B) SCERT கேரளா (SCERT)

(C) DIET கேரளா (DIET)

(D) ஆரம்பகால குழந்தைப் பருவ பராமரிப்பு மற்றும் கல்வி மையம் (ECCE)

60. உள்ளாட்சி அமைப்புகளின் வரம்பில் சேர்க்கப்படாத ஒன்றைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(A) பள்ளிக்கான அமைவிடம் / வசதிகளை தீர்மானிப்பதற்கான செயல்முறை

(B) குழந்தைகளின் புள்ளிவிவரங்கள்

(C) பாலர் பள்ளியின் அங்கீகாரம்

(D) சுற்றுப்புறத்தில் அமைந்துள்ள பள்ளி

61. பின்வருவனவற்றில் எது மத்திய நிதியுதவியுடன் அமல்படுத்தப்படும் திட்டமல்ல?

(A) ICDS (B) NRHM

(C) SPAC (D) NPAG-ICPS

62. பின்வருவனவற்றிலிருந்து பாலர் பள்ளியில் பெற்றோருக்கான பயிற்சியில் சேர்க்கப்பட வேண்டிய கருத்தாக்கங்களை மட்டும் தேர்வு செய்யவும்.

(i) குழந்தைகளுக்கு முன்மாதிரியாக இருப்பதன் அவசியத்தைப் பெற்றோருக்கு உணர்த்துதல்.

(ii) சவால்களை எதிர்கொள்ளும் குழந்தைகளின் பரிசீலனை தொடர்பான பிரச்சினைகள் குறித்து தெளிவு பெறுதல்.

(iii) குழந்தை உரிமைகள் மற்றும் தற்போதுள்ள சட்ட அமைப்பு மற்றும் வழிமுறைகள் பற்றிய புரிதலை மேம்படுத்துதல்.

(iv) குழந்தைகளைத் தொடர்ந்து மதிப்பிடுவதிலும், அவர்களை மற்ற குழந்தைகளின் சாதனைகளுடன் ஒப்பிடுவதிலும் பெற்றோரின் பங்கைப் புரிந்துகொள்வது.

(A) கருத்தாக்கங்கள் (iv), (iii) மற்றும் (i)

(B) கருத்தாக்கங்கள் (iii), (i) மற்றும் (ii)

(C) கருத்தாக்கங்கள் (iii), (iv) மற்றும் (ii)

(D) மேலே உள்ள அனைத்து கருத்தாக்கங்களும் சேர்க்கப்பட வேண்டும்.

63. பொதுக் கல்வித் துறையின் சமக்ர சிக்ஷா கேரளா STARS திட்டத்தின் கீழ் மாநிலம் முழுவதும் பாலர் பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வர்ணக்குடாரம் திட்டத்தில், குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கு உதவும் வகையில் ஒவ்வொரு பள்ளியிலும் எத்தனை செயல்பாட்டுப் பகுதிகள் அமைக்கப்பட்டுள்ளன?

(A) 3 செயல்பாட்டுப் பகுதிகள்

(B) 13 செயல்பாட்டுப் பகுதிகள்

(C) 23 செயல்பாட்டுப் பகுதிகள்

(D) 33 செயல்பாட்டுப் பகுதிகள்

64. கீழே கொடுக்கப்பட்டுள்ள மதிப்பாய்வு உத்திகளில் இடம்பெறாத ஒன்றைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(A) முறையான உரையாடல்

(B) கண்காணிப்பு

(C) செயல்திறன் மதிப்பீடு

(D) போர்ட்ஃபோலியோ (தொகுப்பு) மதிப்பீடு

65. ஒவ்வொரு குழந்தையின் பலங்கள், திறன்கள், சாதனைகள் மற்றும் குறைபாடுகளைக் கவனித்து, புரிந்துகொண்டு, ஆதரவு வழங்குவதன் மூலம் கற்கும் மாணவரை மதிப்பிடுவதற்கு ஆசிரியர் பயன்படுத்தும் முறை எது?

(A) தனிநபர் மதிப்பாய்வு

(B) சுய மதிப்பாய்வு

(C) சக நபர்களின் மதிப்பாய்வு

(D) தொடர் மதிப்பாய்வு

66. பாலர் பள்ளி மதிப்பாய்வு தொடர்பான தனது கண்டறிதல் முடிவுகளை ஆசிரியர் யாருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்?

(A) பெற்றோர்களுடன்

(B) பள்ளி ஆதரவு குழுவினருடன்

(C) சுகாதாரப் பணியாளர்களுடன்

(D) மேற்கண்ட அனைவருடனும்

67. பாலர் பள்ளித் தாளில் உள்ள 'பட்டாம்பூச்சி படத்தை வரையலாம்' என்ற செயல்பாடு எந்தெந்த வளர்ச்சிப் பகுதிகளைக் கருத்தில் கொள்கிறது?

(A) அறிவாற்றல் வளர்ச்சி - படைப்பாக்க அழகியல் உணர்வு வளர்ச்சி

(B) சமூக உணர்வுத்திறன் வளர்ச்சி - அறிவாற்றல் வளர்ச்சி

(C) மொழி வளர்ச்சி - உடல் இயக்க வளர்ச்சி

(D) படைப்பாக்க அழகியல் உணர்வு வளர்ச்சி சமூக உணர்வுத்திறன் வளர்ச்சி

68. பாலர் பள்ளியில் ஒவ்வொரு கதை சொல்லல் நிகழ்வுக்குப் பிறகு குழந்தைகளின் மொழி வளர்ச்சியை எவ்வாறு மதிப்பிடலாம்?

பொருத்தமற்ற ஒன்றைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள்:

(A) சுருக்கமான வாக்கியங்களில் கதை சொல்லப்படுகிறதா?

(B) தொடக்கம் மற்றும் முடிவுடன் கதை சொல்லப்பட்டதா?

(C) குழந்தைகள் தாங்களே சொந்தமாக கதையை எழுதுகிறார்களா?

(D) கதாபாத்திரங்களின் பெயர்கள் அவர்களுக்கு நினைவில் இருக்கிறதா?

69. கல்வி உரிமைச் சட்டத்தின் விதிகளின்படி, கேரள அரசால் 1 ஆம் வகுப்பில் குழந்தைகள் சேர்க்கைக்கான வயது வரம்பு என்ன?

(A) 5 ஆண்டுகள்

(B) 6 ஆண்டுகள்

(C) 7 ஆண்டுகள்

(D) மேற்கூறிய அனைத்தும்

70. ஒரு பாலர் பள்ளி மாணவன் தனது உடல் மற்றும் மனம் சார்ந்த தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்ச்சியை அடைய வேண்டுமானால், அவனது குடும்பச் சூழல் எவ்வாறு பராமரிக்கப்பட வேண்டும்? கீழ்க்கண்டவற்றுள் தவறான கூற்று எது என்பதை தேர்ந்தெடுக்கவும்?

(A) குடும்ப சூழலின் விதிமுறைகளுக்கு ஏற்ப அன்பு மற்றும் ஆர்வம்

(B) குடும்ப சூழலில் மகிழ்ச்சி மற்றும் நல்லிணக்கம்

(C) குடும்ப சூழலில் நேர்மை மற்றும் வெளிப்படைத்தன்மை

(D) குடும்ப சூழலில் பரஸ்பர மரியாதை

71. பின்வருவனவற்றில் பாலர் பள்ளியின் மதிப்பீட்டிற்கான நோக்கங்களில் சேர்க்கப்படாததை தேர்ந்தெடுத்து எழுதவும்.

(A) கற்றல் செயல்பாட்டில் குழந்தைகளின் தீவிர பங்கேற்பையும் ஊக்கத்தையும் உறுதி செய்தல்

(B) பெற்றோருக்கு அவர்களின் குழந்தைகளின் திறன்கள் மற்றும் வரம்புகள் குறித்து பின்னூட்டக் கருத்துகளை வழங்குதல்

(C) ஒவ்வொரு குழந்தையின் தனிப்பட்ட பண்புகள் மற்றும் திறன்களை அடையாளம் காணுதல்

(D) ஒவ்வொரு குழந்தையையும் மதிப்பீடு செய்து தரப்படுத்துதல்

72. கீழ்க்கண்டவற்றில் பாலர் பள்ளி குழந்தைகளுக்கான குறிப்பான தேவைகளில் சேர்க்கப்படாதவற்றைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள்:

(A) கூர்ந்து கவனிக்கவும், பரிசோதனை செய்யவும், சவால்களை எதிர்கொள்ளவும் தேவையான சுதந்திரத்தை குழந்தை விரும்புகிறது.

(B) சமூக உலகத்தை உருவாக்க தங்களைத் தாங்களே விட்டுக்கொடுக்க குழந்தைகள் விருப்பத்துடன் தயாராக உள்ளனர்.

(C) ஒவ்வொரு குழந்தையும் தனது தனிப்பட்ட சாதனைக்கான செயல்பாடுகளுக்கான முன்னுரிமையையும் மற்றும் பரிசீலனையையும் அளிக்கிறது.

(D) மற்றவர்கள் சொல்வதைக் கேட்கவும், பகிர்ந்து கொள்ளவும், நண்பர்களின் சூழ்நிலைகளைப் புரிந்து செயல்படவும் குழந்தை விரும்புகிறது.

73. பின்வருவனவற்றிலிருந்து பாலர் பள்ளி அளவில் குழந்தையின் இயல்பின் முக்கிய அம்சங்களைத் தேர்ந்தெடுத்து எழுதவும்:

(A) குறைந்த நேரம் கவனம் செலுத்துவது

(B) அளவுக்கதிகமான ஆர்வம்

(C) பின்பற்றும் தன்மை

(D) மேற்கூறிய அனைத்தும்

74. கற்பித்தல் கையேட்டில் 'தனிப்பயனாக்கப்பட்ட கற்றல் திட்டத்தை (ILP)' சேர்ப்பதன் நோக்கம் என்ன?

(A) அனைத்து குழந்தைகளுக்கும் சம அளவிலான கற்றலை உறுதி செய்தல்

(B) கற்றுக்கொள்ளும் திறனுள்ள குழந்தைகள் மீது அதிக கவனம் செலுத்துதல்

(C) சிறப்புத் தேவைகள் உள்ள குழந்தைகளின் ஆர்வங்கள் மற்றும் திறன்களுக்கு ஏற்ப கற்பித்தல்

(D) கற்றலில் பின்தங்கிய குழந்தைகள் மீது அதிக கவனம் செலுத்துதல்

75. தினசரி, மாதாந்திர மற்றும் வருடாந்திர திட்டங்களுக்கு இடையிலான முக்கிய வேறுபாடு என்ன?

(A) குறிக்கோள்களின் வீச்செல்லை மற்றும் கால அளவில் வேறுபாடு

(B) சேர்க்கப்பட்டுள்ள செயல்பாடுகளின் எண்ணிக்கையில் வேறுபாடு

(C) திட்டத்தை எழுதவும் மற்றும் பதிவு செய்யவும் பயன்படுத்தப்படும் மொழி / வாசகங்களில் வேறுபாடு

(D) குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் எதுவுமில்லை.

76. கேரள மாநில குழந்தைகள் இலக்கிய நிறுவனம் வழங்கிய 2024 – ஆம் ஆண்டுக்கான கவிதை வகையினத்தில் விருது பெற்ற நூல் எது?

(A) குழந்தைகள் எழுத்தாளர்

(B) பூதம்

(C) சாக்ஷி

(D) பூமாலா

77. பாலர் பள்ளியில் பணியிடங்களை திறம்பட பயன்படுத்துவது ஆசிரியருக்கு எவ்வாறு உதவுகிறது?

(A) ஆசிரியருக்கு ஓய்வெடுக்க அதிக நேரம் கிடைக்கிறது.

(B) ஆசிரியர் மற்றும் பள்ளியைப் பற்றி நேர்மறையான கருத்தை இது பெற்றோர்கள் பெறுவதற்கு உதவுகிறது.

(C) வகுப்பறையை மிகவும் ஈர்ப்புள்ளதாக இதன் மூலம் மாற்றலாம்.

(D) ஒவ்வொரு குழந்தையின் கற்றல் முன்னேற்றத்தையும் கண்காணிக்கலாம் மற்றும் தனிப்பட்ட கவனத்தை தரலாம்.

78. பாலர் பள்ளி கல்வியில் ஒலி-காட்சி (ஆடியோ-விஷுவல்) ஊடகத்தைப் பயன்படுத்துவதன் முக்கிய நோக்கம் என்ன?

(A) குழந்தைகளுக்கு சமீபத்திய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்

(B) ஒலி-காட்சி ஊடகம் மூலம் ஆசிரியரின் பணிச்சுமையை இலகுவாக்குதல்.

(C) கற்றல் செயல்முறையை மிகவும் ஈர்ப்புள்ளதாக, ஊடாடும் தன்மை உள்ளதாக மற்றும் பயனுள்ளதாக மாற்றுதல்

(D) குழந்தைகளின் கவனத்தை நீண்ட நேரத்திற்கு காட்சி ஊடகத் திரை மீது திருப்புதல்.

79. பொருத்தமான தலைப்புகளிலும், குழந்தையின் பரிச்சயமான சூழல் மற்றும் அறிவின் வரம்புகளுக்குள்ளும் கவனம் செலுத்துகிறவாறு குழந்தை பெற வேண்டிய கற்றல் அனுபவங்களைத் திட்டமிடும் செயல்முறைக்கு என்ன பெயர்?

(A) விரிவான திட்டமிடல்

(B) தினசரி திட்டமிடல்

(C) தனிப்பட்ட திட்டமிடல்

(D) கருப்பொருள் திட்டமிடல்

80. பாலர் பள்ளி செயல்பாடான 'பாடுதல் மற்றும் விளையாடுதல்' என்பது எந்த வளர்ச்சிப் பகுதியுடன் தொடர்புடையது?

(A) மொழி வளர்ச்சி

(B) சமூக உணர்வுத்திறன் வளர்ச்சி

(C) உடல் இயக்கத்திறன் வளர்ச்சி

(D) அறிவாற்றல் வளர்ச்சி

81. பின்வருவனவற்றில் எது இயற்கை நடைப்பயணங்களின் நன்மைகளுள் ஒன்றாக இல்லை என்பதைத் தேர்ந்தெடுத்து எழுதவும்?

(A) நெருக்கமாகக் கவனிக்கும் திறன்

(B) பார்த்ததைச் சொல்லும் திறன்

(C) அனுபவங்களை விவரிக்கும் திறன்

(D) உரையாற்றும் திறன்

82. பின்வரும் மென்பொருட்களில் எது பார்வைக் குறைபாடுள்ள குழந்தைகளுக்குப் பயனுள்ளது?

(A) பேசுவதை எழுத்து வடிவ உரையாக மாற்றும் மென்பொருள்

(B) காட்சி தகவல் பரிமாற்ற மென்பொருள்

(C) திரை வாசிப்பு மென்பொருள்

(D) குரலை அடையாளம் காணும் மென்பொருள்

83. பின்வருவனவற்றில் கால்கள் மற்றும் கைகளின் நுட்ப தசை இயக்க வளர்ச்சி தொடர்பான செயல்பாட்டைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள்:

(A) வடிவங்களை உருவாக்குதல்

(B) இயற்கை பயணம்

(C) பொம்மலாட்டம்

(D) சைக்கிள் ஓட்டுதல்

84. மார்பிலிங்எனப்படும்கலைநுட்பத்திற்குஎந்தப்பொருள்பயன்படுத்தப்படுகிறது?

(A) வாட்டர்கலர்

(B) கிரையான்கள்

(C) வண்ண பென்சில்

(D) எனாமல் பெயிண்ட்

85. கருப்பொருட்களைத் தேர்ந்தெடுக்கும்போது பின்வருவனவற்றில் எதைக் கருத்தில் கொள்ள வேண்டும்? கீழ்க்கண்டவற்றுள் பொருத்தமற்ற ஒன்றைத் தேர்ந்தெடுத்து எழுதவும்.

(A) கருப்பொருள்களின் பரஸ்பர உறவைக் கருத்தில் கொண்டு அனுபவங்கள் வழங்கப்பட வேண்டும்.

(B) கருப்பொருள்கள், குழந்தையை முறையான கற்றல் நிலைக்கு இட்டுச் செல்ல வேண்டும்.

(C) வயது மற்றும் உள்ளூர் பண்பியல்புகளுக்கேற்ப கருப்பொருள்கள் ஒழுங்கமைக்கப்பட வேண்டும்.

(D) குழந்தையின் பல்வேறு வளர்ச்சிப் பகுதிகளின் வளர்ச்சிக்கு ஏற்றவாறு கருப்பொருள்கள் திட்டமிடப்பட வேண்டும்.

86. 'சிறு குழந்தைகளைப் பொறுத்தவரை, அவர்கள் இயல்பாக ஈடுபடும் எந்தச் செயலும் விளையாட்டுதான்' என்று கூறியவர் யார்?

(A) காந்திஜி

(B) ஃப்ரோபெல்

(C) சுவாமி விவேகானந்தர்

(D) மரியா மாண்டிசோரி

87. ஒரு ஆசிரியர் பொம்மலாட்ட நாடக வசனத்தை தயாரித்து மற்றும் அதை நிகழ்த்தும்போது மனதில் கொள்ள வேண்டிய முக்கியமான விஷயங்கள் என்ன?

கீழ்க்கண்டவற்றுள் பொருத்தமற்ற ஒன்றைத் தேர்ந்தெடுத்து எழுதவும்:

(A) கதாபாத்திரத்தின் நகர்வு / அசைவியக்கம்

(B) பொருத்தமான பின்னணி

(C) பார்வையாளர்களின் பதில்வினை

(D) உரையாடலில் குரல் மாற்றம்

88. சிவப்பு இரத்த அணுக்களில் ஹீமோகுளோபின் உருவாவதற்கு எந்த கனிமம் அவசியம்?

(A) கால்சியம்

(B) மெக்னீசியம்

(C) இரும்பு

(D) பொட்டாசியம்

89. பின்வரும் ஊட்டச்சத்துக்களில் எது முக்கியமாக உடல் வளர்ச்சிக்கு உதவுகிறது?

(A) புரதம்

(B) கொழுப்பு

(C) வைட்டமின்கள்

(D) மாவுச்சத்து

90. சிறு காயத்தில் கூட தொடர்ந்து இரத்தக்கசிவு வரும் குழந்தைக்கு எந்த வைட்டமின் உணவில் அதிகமாக சேர்க்க மருத்துவர் பரிந்துரைப்பார்?

(A) வைட்டமின் A

(B) வைட்டமின் C

(C) வைட்டமின் E

(D) வைட்டமின் K

91. மனித உடலில் எந்த சுரப்பியின் செயல்பாடு பாதிக்கப்படுவதால் நீரிழிவு நோய் ஏற்படுகிறது?

(A) கணையம்

(B) பிட்யூட்டரி சுரப்பி

(C) தைராய்டு சுரப்பி

(D) அட்ரீனல் சுரப்பி

92. பின்வருவனவற்றில் எது பற்றாக்குறையினால் ஏற்படும் நோய்?

(A) மலேரியா

(B) நோஞ்சான் நோய் (மராஸ்மஸ்)

(C) புற்றுநோய்

(D) மஞ்சள் காமாலை

93. குழந்தைகளில் உடல் பருமனை ஏற்படுத்தும் காரணிகள் யாவை?

i. உடற்பயிற்சியின்மை

ii. மோசமான உணவுமுறை

iii. அதிக கொழுப்பு மற்றும் சர்க்கரை நிறைந்த உணவுகள்

iv. உணவில் ஊட்டச்சத்து குறைபாடுகள்

(A) i, ii, iii

(B) ii, iii

(C) i, iii

(D) i, iii, iv

94. அவசரகால நிவாரணம், வறுமை ஒழிப்பு மற்றும் சமூக நீதி ஆகிய இலக்குகளுடன் நீண்டகால சர்வதேச வளர்ச்சித் திட்டங்கள் மூலம் செயல்படும் சர்வதேச மனிதாபிமான அமைப்பு எது?

(A) UNESCO

(B) UNICEF

(C) WHO

(D) CARE

95. பாலர் பள்ளியின் இயற்பியல் சூழலில் இடம்பெறாதது எது?

(A) நிழல் தரும் மரங்கள், தோட்டம் மற்றும் வேலி

(B) கவர்ச்சிகரமான படங்களால் அலங்கரிக்கப்பட்ட சுவர்கள்

(C) அனைத்து குழந்தைகளுக்கும் கேள்விகள் கேட்கவும், செயல்பாடுகளில் பங்கேற்கவும் வாய்ப்பு உள்ளது

(D) பொம்மைகள், படப் புத்தகங்கள் மற்றும் பட அட்டைகள்

96. கற்பித்தல் அணுகுமுறைகள் மற்றும் கற்பித்தல் முறைகளில் ஏற்படும் சமகால மற்றும் அடிப்படை மாற்றங்களை எதிர்கொண்டு, பாடத்திட்ட சீர்திருத்தத்தின் ஒரு பகுதியாக தற்போதுள்ள ஆசிரியர்களை மேம்படுத்துவதற்கும் அதிகாரமளிப்பதற்கும் உதவும் நிலைமாற்றத் திட்டம் எது?

(A) அறிமுகப் பயிற்சி

(B) முன் சேவைப் பயிற்சி

(C) ஒருங்கிணைந்த திட்டங்கள்

(D) பணிக்காலப் பயிற்சி

97. கால்கள், கைகளின் நுட்ப தசை இயக்கத்திறன் வளர்ச்சி, கற்பனைத்திறன் உருவாக்கம் மற்றும் காட்சி-இடஞ்சார்ந்த நுண்ணறிவு வளர்ச்சிக்கு பாலர் பள்ளியில் எந்த பணியிடம் தயார் செய்யப்பட வேண்டும்?

(A) பசுமைப் பரப்பு

(B) கணித அமைவிடம்

(C) படம் வரைதலுக்கான அமைவிடம்

(D) மொழித்திறன் வளர்ச்சிக்கான அமைவிடம்

98. ஆசிரியர் கல்வியின் தரம் மற்றும் இயற்பியல் தரநிலையை பராமரிக்கும் நோக்கத்துடன் செயல்படும் தேசிய அளவிலான நிறுவனம் எது?

(A) ICCW

(B) NCTE

(C) CBSE

(D) NCERT

99. கேரளாவில்பொதுக்கல்வித்துறையால்,STARSதிட்டத்தின்கீழ்,தொடக்கப்பள்ளிக்கு முந்தைய பாலர் பள்ளிக்கான துறையில் சர்வதேச தரத்திலான கற்றல் வசதிகளை வழங்குவதற்காக 13 பணியிடங்களை அமைப்பதன் மூலம் செயல்படுத்தப்படும் திட்டம் எது?

(A) வர்ணக்கூடாரம்

(B) கலிப்பாட்டம்

(C) கிளிகொஞ்சல்

(D) கலிதோணி

100. கீழ்க்கண்டவற்றில் பாலர் பள்ளி வகுப்பறை சூழலின் பண்பியல்புகளுடன் ஒத்துப்போகாத கூற்று எது?

(A) சுதந்திரமாகவும் பயமின்றியும் நடவடிக்கைகளில் ஈடுபட வாய்ப்புகளை வழங்குதல்

(B) குழந்தைகளின் கற்றல் அளவை ஒப்பிடுதல் மற்றும் தகவலளித்தல்

(C) ஒவ்வொரு குழந்தையின் எழுத்துக்களையும் மற்றும் படைப்புகளையும் காட்சிபடுத்தல்

(D) கவனிப்பு மற்றும் விசாரணைக்கு பல்வேறு சூழ்நிலைகளை உருவாக்குதல்

## SPACE FOR ROUGH WORK

SPACE FOR ROUGH WORK